Tamil | தமிழ்

# முன்னுரிமை முதன்மைப் பராமரிப்பு மையங்கள்

## நீங்கள் அவசரமாக மருத்துவர் ஒருவரைப் பார்க்க வேண்டுமா?

முன்னுரிமை முதன்மைப் பராமரிப்பு மையங்கள் (PPCCs) அவசர சிகிச்சைக்கான காயங்கள் அல்லது நோய் உள்ள எவருக்கும் இலவச சிகிச்சை அளிக்கின்றன.

PPCC மருத்துவர்கள் உங்களுக்கு தேவையான சிகிச்சையை ஒரு மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் பெறுவதை விட விரைவாகப் பெற உதவுவார்கள்.

இலேசான தொற்றுகள், சிறிய தீக்காயங்கள், தசைப்பிடிப்புகள் அல்லது சந்தேகத்திற்கிடமான எலும்பு முறிவு போன்ற நிலைமைகளில் அவர்கள் சிகிச்சை அளிக்க முடியும். PPCC சேவைகளில் நோயியல் (pathology), கதிரியக்கவியல் (radiology) மற்றும் மருந்தியல் (pharmacy) ஆகியவை அடங்கும்.

**உங்களுக்குக் கடுமையான காயம் அல்லது நோய் இருந்தால், மூன்று பூஜ்யம் (000) என்ற எண்ணை அழைக்கவும். உங்களுக்கு அவசர சிகிச்சை தேவையில்லை என்றால், உங்கள் வழக்கமான மருத்துவரிடம் சந்திப்பு ஏற்பாடு (appointment) ஒன்றினைச் செய்யவும்.**

PPCC சேவைகள் 'மெடிகேர்'அட்டை உள்ள அல்லது இல்லாத அனைவருக்கும் இலவசம்.

முன்னுரிமை முதன்மைப் பராமரிப்பு மையங்களில் மொழிபெயர்த்துரைப்பாளர்கள் கிடைப்பர். மொழிபெயர்த்தல் மற்றும் மொழிபெயர்த்துரைத்தல் சேவைக்கு, TIS National -ஐ 131 450 என்ற எண்ணில் அழைக்கவும்.

**அமைந்திருக்கும் இடங்கள் மற்றும் கூடுதல் தகவல்களுக்கு Better Health Channel -க்குச் செல்லவும்: betterhealth.vic.gov.au/priority-primary-care-centres**

TIS TRANSLATING AND INTERPRETING SERVICE

phn VICTORIAN-TASMANIAN ALLIANCE
An Australian Government Initiative

VICTORIA State Government